DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**STC No. 17/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | | | |
| Name | : | கிரிஷாகன் | Age | : | 31 |
| S/o | : | நடேசன் | Occupation | : | கிளை மேலாளர், பாரதிநகர் கிளை |
| Village | : | பாரதிநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2026.

**13.03.2026**

**(எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரத்தில் பாரதிநகர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜராகியுள்ளேன். பொதுவாக ஒரு வங்கியில் காசோலையை செலுத்தும் போது pay Slip வுடன் காசோலை செலுத்தப்படும். pay Slip ல் 24.08.2023 என்று தான் உள்ளது . காசோலை எண். 834925 என்பது 24.08.2023 அன்று எங்கள் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. ம.சா.ஆ 1 காசோலையில் வைக்கப்பட்ட அச்சு 23.08.2023 என்று தவறாக சீல் வைக்கப்பட்டு அது எங்களால் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே 24.08.2023 அன்று தான் காசோலை எங்கள் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ம.சா.ஆ 1 காசோலை கொடுத்தவர் எந்த தேதியிட்டு கொடுத்துள்ளார் என்றால் 24.08.2023 ஆகும். எவ்வாறு மேற்சொன்ன சீல் தவறானது என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் காசோலையின் பின்பாக All our stamp are cancelled என்று அச்சு வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் எனக்கு முன்பாக வங்கி மேலாளருடையது. Pay Slip-ல் 23.08.2023 என்று அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலை 23.08.2023 ம் தேதியன்று தான் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், பின்னால் எதிர் தரப்பில் தவறை சுட்டிக்காட்டிய பின்பு திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக எதிரி தரப்பில் கொடுக்கும் காசோலையானது காசோலை தேதியிலோ அல்லது அதற்கு பின்னரோ காசோலைய பெற்ற

புகார்தாரர் மேற்படி காசோலையை வங்கியில் கொடுத்தால் தான் காசோலையை பெற்றவரான புகார்தாரரின் வங்கியில் வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். பொதுவாக Funds insufficient stamp signature differs ஆகியவை தொடர்பான காசோலைகள் மறுநாள் தான் காசோலை செலுத்திய நபருக்கு தெரிவிக்கப்படும் என்றால் சரியல்ல. எனவே 23 செலுத்தப்பட்ட காசோலை 24.08.2023 ம் தேதியன்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு தவறுதலாக முத்திரையிட்டுவிட்டதாக அறிவிப்பு அனுப்பப்படா என்றால் இல்லை. எங்களுக்கு புகார்தாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட நகல்களில் மேற்சொன்ன Stamp cancelled என்று குறிப்பிடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 14:23:42 +0530